நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 15.11.2019

2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 15.11.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.ப.சத்தியநாதன்.பி.எஸ்.சி.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

1) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1, நாள்.12.01.2017ன்படி, அனுமதி அளிக்கப்பட்டதின்பேரில் 01.03.2017 முதல் 28.02.2020 வரை தனியார் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது பராமரிப்பு காலம் முடிவடைய உள்ளதால் இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் கீழ்க்காணும் தெருவிளக்குகளை 01.03.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு தனியார் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரக, தலைமை பொறியாளர் சென்னை அவர்களிடம் இருந்து முன் ஒப்புதல் பெற உரிய கருத்துரு சமர்ப்பிக்கவும், அதற்காகும் செலவினத்தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | தெருவிளக்குகளின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 1x24 வாட்ஸ் மின் சேமிப்பு விளக்குகள் (CFL) | 2296 எண்ணம் |
| 2 | 4x24 வாட்ஸ் மின் சேமிப்பு விளக்குகள் (CFL) | 230 எண்ணம் |
| 3 | 1x400 வாட்ஸ் உயர் கோபுர மின் விளக்குகள் (MHL) | 94 எண்ணம் |
| 4 | 45 வாட்ஸ் எல்.இ.டி. மின் விளக்குகள் (LED) | 63 எண்ணம் |

**பராமரிப்பு செலவினம்:**

| | |
|---|---|
| 2020–2021 ம் ஆண்டு | ரூ.47.59 இலட்சம் |
| 2021–2022 ம் ஆண்டு | ரூ.52.34 இலட்சம் |
| 2022–2023 ம் ஆண்டு | ரூ.57.57 இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு:** 1) 01.03.2020 முதல் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள முன் ஒப்புதல் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக, தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கு உரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5495/2019/இ1)**
**தீர்மான எண் :560** அனுமதிக்கப்பட்டது.

2) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை இயக்குவதற்கு பயன்படுத்தப்படும் மொத்தம் உள்ள 193 சுவிட்ச் பாக்ஸ்களில் 113 எண்ணம் பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள சுவிட்ச் பாக்ஸ்களுக்கு பதிலாக புதிய உதிரிப் பொருட்கள் வாங்கி சுவிட்ச் பாக்ஸ்களில் பொருத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00/–இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5573/2019/இ1)**
**தீர்மான எண் :561** அனுமதிக்கப்பட்டது.

**3)** போடிநாயக்கனூர் நகராட்சி சிறைக்காடு உரக்கிடங்கில் உள்ள காவலர் அறை பழுது சரிசெய்யவும், மின்வசதி செய்யவும், பழைய பொருட்கள் வைப்பதற்கு ஷெட் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00/—இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5574/2019/இ1)**
**தீர்மான எண் :562** அனுமதிக்கப்பட்டது.

**4)** இந்நகராட்சியின் மின்னாளுமைக்கு UPS மற்றும் மின்கலம் புதிதாக வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.3,60,000/—ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.** | 6KVA Online UPS (2 years warranty) with Exide 100 AH 6 EL Industrial Battery (5 years warranty) | 10 எண்ணம் |
| **2.** | 3KVA (Luminos) 72 VD S Online UPS க்கு Exide 100 AH 6 EL Industrial Battery (5 years warranty) | 6 எண்ணம் |
| **3.** | அண்ணா நடுநிலைப்பள்ளி அருகில் உள்ள வரிவசூல் மையத்திற்கு Exide 100 AH 6 EL Industrial Battery (5 years warranty) | 4 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.5323/2019/இ1)**
**தீர்மான எண் :563** அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி